முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டாய நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.04.2021, சனிக்கிழமை

1. ஞான சூட்சும கலியின் குருவே
நம்பிக்கைதரும் ஞான குருவே
தானதரும மேலான வழியை
தரணியில் விதைத்த சற்குருவே
2. சற்குருவே ஞான தேசிகனே
சாற்றிடுவேன் உன்பெருமை கூறி
அற்புதம்பட யோகபிரசன்ன ஆசி
அருளுவேன் சார்வரி சேல் திங்கள்
3. திங்களிலே எழுநான்கு திகதி காரிவாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 28ம் நாள், 10.04.2021 சனிக்கிழமை)
தேசிகனுக்கு அவிவாட்டாய நாயனாரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் என்ற பிரணவ சக்தி பரவ
4. பரவவே கலித்துன்பங்கள் யாவும்
பறந்தோடும் மக்களை விட்டு
அறமாக அரங்கன் அருள்மழை
ஆசியாக மக்களை அடைய
5. அடையவே கரும வினைகளும்
ஆபத்தான கண்டங்களும் விலகும்
சோடையான எதிர்வினைகளும்
சூட்சுமமாக அகன்று மேவும்
6. மேவிட அரங்கன் சக்தியான
மேலான தருமபலம் கலந்திட
அவனியில் வறுமை விலகி
அனுகிடும் மழைவளம் புவிவளம்
7. வளமான பசுமை நிலை கூடி
வளரும் மலரும் கழனி கிருஷி
பலமான தொழில் வளங்களும்
பாருலகில் பெருகி ஏற்றம் காணும்
8. காணவே அரங்கன் திருவடி
கண்டடைந்த மக்களுக்கு
ஞானமெனும் உயர்வழி இலகுவாகி
ஞானசித்தி உறுதி ஆகும்
9. ஆகவே தொடரும் தருமம்
அனுதின செபதப பூஜையும்
மிகையாகி நிலைகள் கூடிட
முருகப்பெருமான் வெளிப்பாட்டை

10. வெளிப்பாட்டை காணும் வாய்ப்பும்
வினவிட ஆசியும் கிட்டி மக்கள்
அழியாமை தன்மை அடைவர்
அரங்கனே கலியின் உயர்குரு எனும்

11. எனும் அற்புதம் விளங்கி
ஈடேற்றம் குருவருளால் கண்டு
ஞானவான் ஆகி ஞானியாவர்
ஞான ஆட்சிதனை அமைத்திடுவர்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–